# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2163 - 2020 පෙබරවාරි මස 14 වැනි සිකුරාදා - 2020.02.14

*2163 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 276 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 280 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.**- (i) நிதி (திருத்தம் ) சட்டமூலம் 2020, பெப்புருவரி மாதம் 07ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) சேர்பெறுமதி வரி (திருத்தம்) சட்டமூலம் 2020, பெப்புருவரி மாதம் 07ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2020, மாச்சு மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2020, பெப்புருவரி மாதம் 20 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

.'ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


275-B 82007-405 (2020/02)

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : கம்பஸ் டிரெக்ட் எடியு ஒப்ஷன்ஸ் ஜெர்மனி (பிறைவட்) லிமிடட்
பதிவிலக்கம்: பீவீ 00218488
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2019.12.18
பதிவு முகவரி : 110, லெவல் 02, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு -08

பணிப்பாளர் சபையின் கட்டளைப் பிரகாரம்,

சமலி ரணதுங்க,
கம்பனிச் செயலாளர்.

2- 221

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்.-

கம்பனியின் பெயர் : மெடி த்ரீ சிக்ஸ்ரி சிலோன் (பிரைவெட்) லிமிடெட்
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2018.10.22
பதிவு இலக்கம்: பீவீ 00205598
பதிவு முகவரி :இல. 10/8/ஏ, சிம்போனியா தோட்டம், இஹல கரகஹமுன, கடவத்த

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

2- 247

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்.-

கம்பனியின் பெயர் : திதுல கென்ஸ்ரக்ஷன் என்ட் டிசைனிங் (பிறைவெற்) லிமிடெட்
பதிவு இலக்கம்: பீவீ 00217557
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2019.11.14
பதிவு முகவரி :இல. 73, புதிய வர்த்தக தொடர்மாடி, அகங்கம, காலி

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

2- 248

---

## சிங்ஹ சிமென்ட் ( பிரைவேட்) லிமிடெட்
## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 242 ஆம் பிரிவின் (3) (b) உப பிரிவுக்கிணங்க N F C L பென்னா போர்ட் ஸ்டோரேஜஸ் (பிறைவேட்) லிமிடெட்டை (242(1) க்கு இணங்க கம்பனி பதிவிலக்கம் PV 129810) சிங்ஹ சிமென்ட் ( பிறைவேட்) லிமிடெட் ( கம்பனி பதிவிலக்கம் PV 13719) உடன் 242(1) க்கு இணங்க இணைப்பது பற்றிய அறிவித்தல்

2020, சனவரி 21 ஆந் திகதியன்று கூடிய சிங்ஹ சிமென்ட் (பிறைவேட்) லிமிட்டெட்டின் முற்றுமுழுதான துணைநிறுவன மான N F C L பென்னா போர்ட் ஸ்ரோரேஜஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டின் பணிப்பாளர் சபையினரும் N F C L பென்னா போர்ட் ஸ்ரோரேஜஸ் ( பிறைவேட்) லிமிட்டெட்டின் பணிப்பாளர் சபையினரும் (நிறுவனம்) சந்தித்து N F C L பென்னா போாட் ஸ்டோரேஜஸ் ( பிறைவேட்) லிமிட்டெட்டை, சிங்ஹ சிமென்ட் (பிறைவேட்) லிமிட்டெட்டுடன் பிரிவு 242(1) இணைப்பது குறித்து முடிவெடுக்கப்பட்டது. அதன் பிரகாரம் சிங்ஹ சிமென்ட் (பிறைவேட்) லிமிட்டெட் நிலைத்திருக்க, N F CL பென்னா போர்ட் ஸ்டோரேஜஸ் ( பிறைவேட்) லிமிடெட் அதன் செயற்பாட்டை நிறுத்தும்.

இவ்வறிவித்தல் வெளிவந்த 20 தினங்களுக்குள் 244(1) ஆம் பிரிவுக்கிணங்க N F C L பென்னா போாட் ஸ்டோரேஜஸ் (பிறைவேட்) லிமிடெட் மற்றும் சிங்ஹ சிமென்ட் ( பிறைவேட்) லிமிடெட் ஆகியவற்றை ஒன்றாக இணைப்பதற்குத் தேவையான பிரிவு 243 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள், கம்பனிகள் பதிவாளர் நாயகம் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அதன் பின்னர் இவ்விரு நிறுவனங்களின் இணைப்பானது செல்லுபடியாகும்.

சட்டத்தின் 242(4) ஆம் பிரிவுக்கிணங்க, இணைப்பு தொடர்பான முன்மொழிவுகளின் பிரதிகள், இணைவு குறித்த சிங்ஹ சிமென்ட் ( பிறைவேட்) லிமிடெட் மற்றும் N F C L பென்னா போர்ட் ஸ்டோரேஜஸ் (பிறைவேட்) லிமிடெட்டின் பணிப்பாளர் சபையினரின் அங்கீகாரம் என்பன இந்நிறுவனத்தின் பங்குதாரர்கள் மற்றும் இந்நிறுவனம் பொறுப்புக் கூறத் தக்கவர்கள் பார்வையிடும் வகையில், சிங்ஹ சிமென்ட்

(பிறைவேட்) லிமிடெட்டில் இல. 44/1, நுகே வீதி, பிலியந்தலை எனும் முகவரியில் உள்ள அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் சாதாரண வேலை நேரங்களில் பார்வையிடப்பட முடியும்.

இவ்விணைப்பு குறித்த ஆவணங்களின் பிரதியானது இந் நிறுவனத்தின் பங்குதாரர் அல்லது இந் நிறுவனம் பொறுப்புக் கூற வேண்டியவர்களுக்கு , அவர்கள் கோரிக்கை விடுக்குமிடத்து இலவசமாக அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

சிங்கா சிமெண்ட் ( பிறைவேட்) லிமிடெட்டின் பணிப்பாளர் சபையின் உத்தரவுக்கமைய,

எஸ்ஜே கோர்பரேட் சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிடெட்,
செயலாளர்கள்.

2020, சனவரி 21.

2- 309

---

## N F C L பென்னா போர்ட் ஸ்டோரேஜஸ் (பிறைவேட்) லிமிடெட்
## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 242 ஆம் பிரிவின் (3) (b) உப பிரிவுக்கிணங்க என் எப் சீ எல் பென்னா போர்ட் ஸ்டோரேஜஸ் (பிறைவேட்) லிமிடெட்டை (242(1) க்கு இணங்க கம்பனி பதிவிலக்கம் PV 129810) சிங்ஹ சிமெண்ட் ( பிறைவேட்) லிமிடெட் ( கம்பனி பதிவிலக்கம் PV 13719) உடன் 242(1) க்கு இணங்க இணைப்பது பற்றிய அறிவித்தல்

2020, சனவரி 21 ஆந் திகதியன்று கூடிய சிங்ஹ சிமெண்ட் (பிறைவேட்) லிமிட்டெட்டின் முற்றுமுழுதான துணை நிறுவனமான என் எப் சீ எல் பென்னா போர்ட் ஸ்ரோரேஜஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டின் பணிப்பாளர் சபையினரும் என் எப் சீ எல் பென்னா போர்ட் ஸ்ரோரேஜஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டின் பணிப்பாளர் சபையினரும் (நிறுவனம்) சந்தித்து என் எப் சீ எல் பென்னா போாட் ஸ்டோரேஜஸ் ( பிறைவேட்) லிமிட்டெட்டை, சிங்ஹ சிமெண்ட் ( பிறைவேட்) லிமிட்டெட்டுடன் பிரிவு 242(1) இணைப்பது குறித்து முடிவெடுக்கப்பட்டது. அதன் பிரகாரம் சிங்ஹ சிமெண்ட் (பிறைவேட்) லிமிடெட் நிலைத்திருக்க, என் எப் சீ எல் பென்னா போர்ட் ஸ்டோரேஜஸ் ( பிறைவேட்) லிமிடெட் அதன் செயற்பாட்டை நிறுத்தும்.

இவ்வறிவித்தல் வெளிவந்த 20 தினங்களுக்குள் 244(1) ஆம் பிரிவுக்கிணங்க என் எப் சீ எல் பென்னா போாட் ஸ்டோரேஜஸ் (பிறைவேட்) லிமிடெட் மற்றும் சிங்ஹ சிமெண்ட் ( பிறைவேட்) லிமிடெட் ஆகியவற்றை ஒன்றாக இணைப்பதற்குத் தேவையான பிரிவு 243 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள், கம்பனிகள் பதிவாளர் நாயகம் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அதன் பின்னர் இவ்விரு நிறுவனங்களின் இணைப்பானது செல்லுபடியாகும்.

சட்டத்தின் 242(4) ஆம் பிரிவுக்கிணங்க , இணைப்பு தொடர்பான முன்மொழிவுகளின் பிரதிகள், இணைவு குறித்த சிங்ஹ சிமெண்ட் (பிறைவேட்) லிமிடெட் மற்றும் என் எப் சீ எல் பென்னா போர்ட் ஸ்டோரேஜஸ் (பிறைவேட்) லிமிடெட்டின் பணிப்பாளர் சபையினரின் அங்கீகாரம் என்பன இந்நிறுவனத்தின் பங்குதாரர்கள் மற்றும் இந்நிறுவனம் பொறுப்புக் கூறத்தக்கவர்கள் பார்வையிடும் வகையில், சிங்ஹ சிமெண்ட் (பிறைவேட்) லிமிடெட்டில் இல. 44/1, நுகே வீதி, பிலியந்தலை எனும் முகவரியில் உள்ள அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் சாதாரண வேலை நேரங்களில் பார்வையிடப்பட முடியும்.

இவ்விணைப்பு குறித்த ஆவணங்களின் பிரதியானது இந் நிறுவனத்தின் பங்குதாரர் அல்லது இந் நிறுவனம் பொறுப்புக் கூற வேண்டியவர்களுக்கு , அவர்கள் கோரிக்கை விடுக்குமிடத்து இலவசமாக அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

என் எப் சீ எல் பென்னா போர்ட் ஸ்ரோரேஜஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டின் பணிப்பாளர் சபையின் உத்தரவுக்கமைய,

எஸ்ஜே கோர்பரேட் சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிடெட்,
செயலாளர்கள்.

2020, சனவரி 21.

2- 310

---

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

மத்துரட, அம்பிட்டிக்கொட மகாவெவ குடியிருப்பு இல.122/1 என்ற இடத்தில் குடியிருக்கும் தேசிய அடையாள அட்டை இல. 842572711V கொண்ட புஸ்ஸலமங்கட முதியன்சேலாகே அசங்க சந்திர பண்டார ஆகிய நான், ராகம, ஹொரப்பே, சிறிவர்தன மாவத்தை, இல. 125/ E என்ற இடத்தில் குடியிருக்கும் தேசிய அடையாள அட்டை இல. 947931199V கொண்ட சுமேதிக்கா பிரியதர்சனி வாசுதேவ என்பவருக்கு வழங்கப்பட்டதும், சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசுமான எம். ஐ.எம். ஐநுல்லா அவர்களால் 2017.02.15 ஆந் திகதி எழுதி உறுதி செய்யப்பட்டதுமான இல. 2399 என்ற அற்றோணித்தத்துவப்பத்திரத்தை 2020.01.27 ஆந் திகதி தொடக்கம் எனது விருப்பத்தின் பேரிலும் அபிலாஷையின் பேரிலும் உடனடியாக இரத்துச் செய்கின்றேன். இதற்கு பின்னர் மேற்படி அற்றோணித் தத்துவப்பத்திரம் மூலம் புரியப்படும் ஏதேனும் நடவடிக்கைகளுக்கு நான் பொறுப்புக் கூற மாட்டேன் என அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

பீ. எம். அசங்க சந்திர பண்டார.

2- 189

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

ஜேர்மன், பேர்லின், Luefyowufer-2, 10785 ஐச் சேர்ந்த சஞ்சீவி ரமணி சஹபந்து ஆகிய நான், இத்தால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் பொது மக்களுக்கும் அறிவித்துக்கொள்வதாவது, இலங்கையில் எனது அற்றோணிதத்துவதாரராக கோட்டே, எத்துல் கோட்டை, ஜயவர்தன புர , இல. 761 ஐச் சேர்ந்த சந்திரா மனிலால் சஹபந்துவை (தே.அ.அ.இல. 470103558V) நியமித்த ஜேர்மன் பிரசித்த நொத்தாரிசு Walter Schmidt மூலம் அத்தாட்சிப் படுத்தப்பட்ட 2005.03.17 ஆந் திகதியிடப்பட்ட விசேட அற்றோணித்தத்துவம் என்னால் இரத்துச் செய்யப்பட்டுள்ளது என்பதாகும். இது முதற்கொண்டு எனது அற்றோணிதத்து வதாரரால் மேற்படி அற்றோணித்தத்துவத்தை உபயோ கித்து மேற்கொள்ளப்படும் எந்தவொரு நடவடிக்கையும் செல்லு படியற்றது என்பதுடன் மேற்படி அற்றோணி தத்துவம் இரத்துச் செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும்.

சஞ்சீவி ரமணி சஹபந்து.

2-226

---

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் இல. 5 ஆவது ஒழுங்கை, ஹெலேனா வத்த, குடிரிப்புவ, கல்முருவையைச் சேர்ந்த முன்கொட ஹேவகே சந்துன் சங்கல்ப ஆகிய நான், அந்த விலாசத்தைச் சேர்ந்த மகீனா மிறென்டு இரோஷா சஞ்ஜீவனீ என்பவருக்கு இஸ்ரேயலில் உள்ள இலங்கை தூதரகத்திற்கு இரண்டாம் உப செயலாளர் மற்றும் செயலாளர் எச். எச். ஆர். விக்ரமசிங்க முன்னிலையில் 2018.02.25 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்டு அதிகார பூர்வமாக எழுதப்பட்ட 121 தொகுதியில் 9914 என்ற folio புத்தக பதிவான புத்தக இல. 1423 உடைய 2018.04.09 என்ற திகதியில் வடமத்திய மாகாணத்தின் பதிவாளர் ஆணையாளர் திணைக்களத்தின் குருநாகல் பிரிவின் மூலம் இத் தத்துவத்தை இத்தினத்திலிருந்து இல்லாதொழித்தும் இரத்துச் செய்தும் வரிதாக்கியும் விடுகின்றேன் என இத்தால் பொது மக்களுக்கும் மேற்படி குடியரசின் அரசாங்கத்திற்கும் அறிவித்துக் கொள்கின்றேன்.

முன்கொட ஹேவகே சந்துன் சங்கல்ப.

2-229

---

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் இல. 5, ஆவது ஒழுங்கை, ஹெலேனா வத்த, கல்முருவையைச் சேர்ந்த முனு கொட ஹேவகே சந்துன் சங்கல்ப ஆகிய நான், அந்த முகவரியைச் சேர்ந்த மகீனா மிறென்டு இரோஷா சஞ்ஜீவனீ டீ சில் வா என்பவருக்கு இஸ்ரேயலில் உள்ள இலங்கை தூதரகத்திற்கு முதலாம் உப செயலாளர் மற்றும் செயலாளர் எம். ஆர். சி.பி. ஏக்கநாயக்க முன்னிலையில் 2015.02.20 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்டு அதிகார பூர்வமாக எழுதப்பட்ட 82 தொகுதியில் 867 என்ற folio புத்தக பதிவான புத்தக இல. 6168 உடைய 2015.03.26 என்ற திகதியில் வடமத்திய மாகாணத்தின் பதிவாளர் ஆணையாளர் திணைக்களத்தின் குருநாகல் பிரிவின் மூலம் இத் தத்துவத்தை இத்தினத்திலிருந்து இரத்துச் செய்தும் வரிதாக்கியும் விடுகின்றேன் என இத்தால் பொது மக்களுக்கும் மேற்படி குடியரசின் அரசாங்கத்திற்கும் அறிவித்துக் கொள்கின்றேன்.

முனுகொட ஹேவகெ சதுன் சங்கல்ப.

2-230

---

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

அக்கரைப்பற்று -02, பிரதான வீதியைச் சேர்ந்த முகம்மட் றிஸ்லி முகம்மட் ஹனீபா அல்லது முகம்மட் ஹனீபா முகம்மட் றிஸ்லி ( தே.அ.அ.இல.651610818V) ஆகிய நான், ஒன்டோரியா பிரசித்த நொத்தாரிசு சதிஸ்குமார் பாலசுந்தரம் முன்னிலையில் 2015.09.12 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்திய இலங்கைப் பதிவாளர் திணைக்களத்தின் 149/ 28 ஆம் இலக்க பதிவுப்புத்தகத்தில் 10097 ஆம் இலக்கத்தில் பதியப்பட்டுள்ள வெளிநாட்டு அற்றோணித்தத்துவத்தை இத்தால் அழித்தும் இரத்துச் செய்தும் விட்டேன். இதன் பின்னர் குறித்த அற்றோணித்தத்துவமானது சட்ட ரீதியாக வெற்று வெறிதானதுமாகும்.

முகமட் றிஸ்லி முகமட் ஹனீபா

2-260

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக் கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : டில்கொ கீனபிடிய எஸ்டேட் நேசர் ரிசோட் என்ட் ஸ்பா (பிறைவட்) லிமிட்டட்
பதிவிலக்கம்: பீவீ 93970
பதிவு செய்யப்பட்ட முகவரி :இல. 839/C, டில்கோ கோட் தஹம் மாவத்தை, மாலபே
கூட்டிணைக்கப்பட்ட திகதி: 2013.08.07

கம்பனிச் செயலாளர்.

2- 485

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக் கப்பட்டதாக இத்தால் அறியத்தருகின்றோம்.-*

கம்பனியின் பெயர் : மைக்ரோன்டெக் டிஸ்றிபியூஸன் (பிரைவட்) லிமிட்டட்

கம்பனி இலக்கம்: பீவீ 132014

பதிவு செய்யப்பட்ட அலுவலகம் :இலக்கம் 21A, புத்கமுவ வீதி, கலபலுவாவ, ராஜகிரிய

கம்பனிச் செயலாளர்.

2- 486

---

## விசேட அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

போத்தல, ETF கம, இல. 129 எனும் முகவரியில் வசிக்கும் முத்தெட்டுவத்த, கங்கானம்கே புன்னக திநேச (தே.அ.அ.இல.763500479V) ஆகிய நான், காலி பிரசித்த நொத்தாரிசு கே. ரஜித் பிரியந்த என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தபட்ட 2017.10.04 ஆந் திகதிய 654 ஆம் இலக்க அற்றோணித்தத்துவத்தினால் காலி, மிலித்துவ, புதிய ஒழுங்கை, இல. 57/1 எனும் முகவரியில் வசிக்கும் மொஹமட் சலீம் சிபாயா நொனா (தே.அ.அ.இல. 566313448X) என்பவரை எனது அற்றோணித்தத்துவகாரராக நியமித்திருப்பதை 2019.11.23 ஆந் திகதி முதல் இரத்துச் செய்வதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் அறியத்தருகின்றேன். குறித்த திகதிக்குப் பின்னர் குறித்த எனது அற்றோணித்தத்துவகாரரான மொஹமட் சலீம் சிபாயா நொனா மேற்கொள்ளப்படும் ஏதேனும் நடவடிக்கைக்கு நான் பொறுப்பாளியல்ல என்றும் இத்தால் தெரிவிக்கின்றேன்.

முத்தெட்டுவத்த, கங்கானம்கே புன்னக
திநேச .

2-481

---

## விசேட வெளிநாட்டு அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

பூஸ்ஸ, பன்சல வீதி, தற்போது மிலானோ, இத்தாலியில் (Via Bordighera No, 21, 20142, Milano (Ml)) இல் வசிக்கும் சுவந்த பிரேமலால் மனிமெல்துர ஆகிய நான், மிலானோ, இத்தாலியில் இலங்கை கொன்சியுலர் ஜெனரல் அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2019.03.11 ஆந் திகதிய விசேட வெளிநாட்டு அற்றோணித்தத்துவத்தினால் ரத்கம, மாவடவில, இல. 280/ C எனும் முகவரியில் வசிக்கும் திலேகா தர்சனீ சேரசிங்ஹ என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித்தத்துவம் 2020.01.25 ஆந் திகதி முதல் இரத்துச் செய்து செயலிழக்கச் செய்துள்ளதாக இத்தால் தெரிவிக்கின்றேன்.

சுவந்த பிரேமலால்
மனிமெல்துர.

பூஸ்ஸ, பன்சல வீதி, தற்போது
மிலானோ, இத்தாலியில்
(Via Bordighera No, 21, 20142, Milano (Ml))

2-482

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

மஹரகம, பதிரகொட நாலந்தாராம வீதி, இல. 15 எனும் முகவரியில் வசிக்கும் கபிதன்வி விதானேலாகே ஜாலிய சந்திரகாந்த சொயிசா ( தே.அ.அ.இல. 771490670V) ஆகிய நான், பிரசித்த நொத்தாரிசு தயந்த என். ஹேவாவிதாரன என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட இல. 2635 கொண்ட 2019.09.26 ஆந் திகதிய அற்றோணித்தத்துவத்தினால் மொரட்டுவ, பீ .எம். பிரனாந்து , 6ஆம் ஒழுங்கை, இல.52/7 எனும் முகவரியில் வசிக்கும் சுரவீர ஆரச்சிலாகே அனுஷ்க பியுமால் சுரவீர ( தே.அ.அ.இல. 940232376V) என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித்தத்துவம் 2020.01.27 ஆந் திகதி முதல் இரத்துச் செய்து செயலிழக்கச் செய்துள்ளதாக இத்தால் தெரிவிக்கின்றேன்.

குறித்த திகதிக்குப் பின்னர் எனது சார்பாக மேற்குறித்த அற்றோணித் தத்துவகாரரால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு செயலுக்கும் நாங்கள் பொறுப்பாளிகளல்ல என்பதையும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் அனைத்து பொது மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

கபிதன்வி விதானேலாகே ஜாலிய
சந்திரகாந்த சொயிசா.

2-483

---

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

கொழும்பு 06, கிருலபன, லக்ஷ்மன் பிளேஸ், இல. 08 எனும் முகவரியில் வசிக்கும் ஜயசூரிய குரனகே காமினீ புஷ்பகுமார ஆகிய நான், கொழும்பு உயர் நீதிமன்ற வலயப் பிரசித்த நொத்தாரிசு உமங்கே சுனில் சந்திரசிறி என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட இல. 148 மற்றும் 2000.11.13ஆந் திகதிய அற்றோணித்தத்துவத்தினால் மஹரகம, தம்ப ஹேன வீதி, சமன் உயன, இல. 22/11 எனும் முகவரியில் வசிக்கும் உபாலி தொன் லியன பதிரன என்பவரை எனது அற்றோணித்தத்துவகாரராக நியமித்ததை இதன் மூலம் இரத்துச் செய்வதாக அறியத்தருகின்றேன். இன்று முதல் எனது அற்றோணிதத்துவகாரரால் மேற்கொள்ளப்படும் ஏதேனும் நடவடிக்கைக்கு நான் பொறுப்பாளியல்ல என்றும் இத்தால் தெரிவிக்கின்றேன்.

ஜயசூரிய குரனகே காமினீ
புஷ்பகுமார.

2-484

# ஏல விற்பனைகள்

### சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)
1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

எம். எம். ஷியாமலி மற்றும் ஈ எஸ் தரங்க
கணக்கு இல.: 1116 5759 8234.

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2019.10.31 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2019.12.13ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette) 2019 .11. 28 ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஐலண்ட்" (Island), "தினக்குரல்"(Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான ஐம்பத்தி மூன்று இலட்சத்து நான்காயிரத்து தொளாயிரத்து பதினெட்டு ரூபா நான்கு சதம் (ரூபா 53,04,918.04) 2019, செத்தெம்பர் 04 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஐம்பது இலட்சத்து எழுபத்தி மூவாயிரத்து முந்நூற்று இருபத்தாறு ரூபா பதினான்கு சதம் (ரூபா 50,73,326.14) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினாறு தசம் ஐந்து வீதம் (16.5%) விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இல. 4787 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளின் குத்தகை உரிமைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக 2020.03.13 ஆந் திகதி மு.ப.11.00 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

#### மேற்குறிப்பீடு செய்யப்பட்ட அட்டவணை

தென் மாகாணம், அம்பந்தோட்டை மாவட்டம், தெற்கு கீருவே பத்துவின் தங்காலை பிரதேச சபை எல்லைகளுக்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவின் மொரகொள்ளிய கிராம அலுவலர் பிரிவின் மொரகொள்ளியவில் அமைந்த "அநுகன்வல யாய இன் லொட் 3 இன் உப பிரிவாகும்" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டப்ளியூ. எச். எம். கே. கருணாரத்ன என்பவரால் தயாரிக்கப்பட்ட 2016, செத்தெம்பர் 03 ஆந் திகதியிடப்பட்ட இல. 842 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் $3^6$ எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு: லொட் 12E வீதிக்கான ஒதுக்கம் FVP இல. 318 எனும் வீதி, இல. 2009/45 எனும் வரைபடத்தின் அகற்றப்பட்ட லொட் 4 மற்றும் இக் காணியின் லொட் $3^1$; கிழக்கு: இதே காணியின் லொட்கள் $3^1$, $3^3$, $3^4$, $3^5$ மற்றும் இல. 0773 எனும் வரைபடத்தின் லொட்கள் 4, 5, 6, 7, 8 மற்றும் 9; தெற்கு: இல. 0773 எனும் வரைபடத்தின் அகற்றப்பட்ட லொட் 10 மற்றும் தங்காலை முதல் பெலிஅத்த வரையான பிரதான வீதி ; மற்றும் மேற்கு: இல. 0773 எனும் வரைபடத்தின் லொட் 2 ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு ஏக்கர் மற்றும் முப்பது தசம் ஒன்று மூன்று பேர்ச் (1ஏ. 0றூ. 30.13பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 842 எனும் வரைபடத்திற்கு அமைவாக கூறப்பட்ட தங்காலை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் G 121/122இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

2-325

---

### ஹற்றன் நெஷனல் வங்கி பீஎல்சீ - சிலாபம் கிளை

(முன்பு ஹற்றன் நெஷனல் வங்கி லிமிட்டெட் என சொல்லப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் மீள அறவிடப்படல் 4 ஆவது சிறப்புச் சட்டப்படி படி ஆதனம் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை

நீர்கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஜி. எம். எம். பர்னாந்து அவர்களால் உறுதிப்படுத்தப்பட்டதும், ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ யின் பெயருக்கு எழுதப்பட்டதுமான இலக்கம் 3752 மற்றும் 2011.12.14 ஆந் திகதியிடப்பட்ட மற்றும் காக்காப்பள்ளி பிரசித்த நொத்தாரிசு எஸ். எம். நிலங்கா கீதானி அவர்களால் எழுதி உறுதிப்படுத்தப்பட்ட இலக்கம் 909 மற்றும் 2015.0729 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டு முறியினால் இங்கு முதலாவது ஆதன இடாப்பில் விபரமாக விஸ்தரிக்கப்பட்டுள்ள காணி மற்றும் காக்காப்பள்ளி பிரசித்த நொத்தாரிசு எம். எம். நிலங்கா

கீதானி அவர்களால் எழுதி உறுதிப்படுத்தப்பட்ட இலக்கம் 908 மற்றும் 2015.07.29 ஆந் திகதியிடப்பட்ட முறியின் மூலம் இங்கு இரண்டாவது ஆதன இடாப்பில் விபரமாக விஸ்தரிக்கப்பட்டுள்ள காணி சம்பந்தமாக அறவிடப்பட வேண்டிய தொகையை செலுத்துவது மெனிக் ஆராச்சிகே ஜோர்ஜ் ரொஹான் கடன்காரரால் மறுக்கப்பட்டுள்ளதால் , ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீயினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கேற்ப அறவிடப்பட வேண்டிய கடன்தொகை சகலவற்றையும் செலுத்துவது மற்றும் ஏலதாரரின் கட்டணம் உட்பட சகல தொகைகளையும் அறவிடுவதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள காணி, அக்காணி இருக்கும் இடங்களிலேயே,

**இக் கீழ் விபரிக்கப்பட்ட காணிகளை 1 ஆவது ஆதன இடாப்பு (5ஏ.0றூ.26பே.) 2020 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 05 ஆந் திகதி காலை 11.00 மணிக்கு,**
**2 ஆவது ஆதன இடாப்பு (0ஏ.0றூ.9.61பே.) 2020 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 05 ஆந் திகதி பிற்பகல் 12.30 மணிக்கு என்னால் அதே இடத்தில் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.**

**முதலாவது ஆதன இடாப்பு.-**

வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், சிலாபம் காணிப் பதிவு செய்யும் பிரிவில் முன்னேஸ்வரம் மற்றும் பிடிகல் கோரளை, சிலாபம் பிரதேச செயலாளர் பிரிவினுள், மாதம்ப சிலாபம், பிரதேச சபை எல்லையில் தித்தகடை 567 கிராம அலுவலர் பிரிவினுள் தித்தகடையில் அமைந்துள்ள தித்தகடை ''போவகலே'' என்ற பெயருடைய காணிக்கு அதிகாரம் பெற்ற நிலஅளவையாளர் வர்ணன் பெரேரா அவர்களால் தயாரிக்கப்பட்ட இலக்கம் 8756 மற்றும் 2006.09.15 ஆந் திகதியிடப்பட்ட வரைபடத்தில் காணப்படும் பிரித்து ஒதுக்கப்பட்ட காணியின் பகுதி. இக்காணியின் விஸ்தீரணம்: 5ஏ.0றூ.26பே. அளவான காணியோடு மண், பயிர்ச்செய்கை, கட்டிடம் மற்றும் அங்கு அமைந்துள்ள சகலவற்றோடும்.

**இரண்டாவது ஆதன இடாப்பு.-**

வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், சிலாபம் காணிப் பதிவுப் பிரிவில், ஆணைவிழுந்தான் பற்று வடபிடிகல் கோரளை சிலாபம் செயலாளர் பிரிவினுள், சிலாபம் நகர சபை எல்லையினுள் வட்டக் கள்ளிய, இல. 579 கிராம அலுவலர் பிரிவினுள் வட்டக் கள்ளியில் அமைந்துள்ள "மிலிசன்ட் வத்த" என்ற பெயருடைய காணிக்கு அதிகாரம் பெற்ற நிலஅளவையாளர் எச். எம்.எஸ். கே. ஹேரத் அவர்களால் தயாரிக்கப்பட்ட இலக்கம் 1646 மற்றும் 2015.04.10ஆந் தகிதி இடப்பட்ட வரைபடத்தில் லொட் 1 எனக் காணப்படும் காணிப்பகுதி இக்காணியின் விஸ்தீரணம்: 0ஏ.0றூ.9.61 அளவான காணியோடு மண், பயிர்ச்செய்கை, கட்டிடம் மற்றும் அங்கு அமைந்துள்ள சகலவற்றோடும்.

மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் பற்றிய விளம்பரத்துக்காக 2019.11.01ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும், 2019.11.07ஆந் திகதியுடைய "மவ்பிம", "டெயிலிமிரர்" மற்றும் "தினக்குரல்" ஆகிய பத்திரிகைகளைப் பார்க்கவும்.

**காணிக்கு செல்லும் விதம் -முதலாவது ஆதன இடாப்பு.-** சிலாபம் நகரத்திலிருந்து குருநாகல் பிரதான வீதி ஊடாக கஞ்சுக்குளிச் சந்தி வரை 6 3/4 கிலோ மீற்றர் அளவு பயணித்து சந்தியில் இருந்து அரைவாசியாக கொங்கிறீட் இடப்பட்ட தாரிடப்பட்ட மற்றும் கிரவல் வீதிக்கு இடப்பக்கமாகத் திரும்பி 1.1 கிலோ மீற்றர் அளவு நாற்சந்தி வரை பயணித்து மீண்டும் கிரவல் வீதிக்கு இடப்பக்கமாகத் திரும்பி மீண்டும் 800 மீற்றர் அளவு பயணிக்கும் பொழுது காணி அதன் முன்னால் உள்ள வீதிக்கு வலப்பக்கமாக அமைந்துள்ளது.

**இரண்டாவது ஆதன இடாப்பு.-**கொழும்பு சிலாபம் பிரதான வீதியிலிருந்து 76 கிலோ மீற்றர் பயணிக்கும் பொழுது சிலாபம் நகருக்கு மத்தியைக் கிட்டும், அங்கிருந்து திரும்பி புத்தளம் வீதியின் ஊடாக இடப்பக்கமாக உள்ள ஜுசேவாஸ் வீதிக்குக் கிட்டும் பொழுது 500 மீற்றர் அளவு பயணிக்கவும். இந்த வீதியின் ஊடாக 300 மீற்றர் அளவு பயணிக்கும் பொழுது அந்த வீதியின் எல்லையில் இடப்பக்கமாக இந்தக் காணியை கண்டு கொள்ள முடியும்.

**கட்டணங்கள் செலுத்தும் விதம்.-** உத்தேச கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்கு செலுத்த வேண்டும் :-

1. கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;
2. உள்ளூராட்சி மன்ற வரி 01%;
3. ஏலதாரரின் தரகுப் பணம் 2.5%;
4. நொத்தாரிசுக் கட்டணம் ரூபா 2000.00 ;
5. இலிகிதர் கட்டணம் ரூபா 500.00;
6. ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள்.

மிகுதி 90% ஏலத்திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் வங்கிக்குச் செலுத்த வேண்டும். தவறினால் கொடுக்கப்பட்ட 10% திருப்பிச் செலுத்தப்பட மாட்டாது. காணி மீண்டும் ஏலத்தில் விடும் அதிகாரம் உள்ளது.

**வேறு விபரங்களுக்கு.-** மூத்த முகாமையாளர் (அறவிடுதல்), ஹற்றன் நெஷனல் வங்கி பீஎல்சீ, இல: 479, டி. பி. ஜாயா மாவத்தை, கொழும்பு -10.
தொ. பே: 011-2661828, 011- 2661866.

எல். பி. சேனாநாயக்க,
சமாதான நீதவான், மூத்த உத்தரவு பெற்ற ஏலதாரர்,
விலை மதிப்பிடுபவர், நீதிமன்ற ஆணையாளர்.

இல. 200, 2 ஆவது மாடி,
புதுக்கடை வீதி,
கொழும்பு 12.

தொலைபேசி: 011-2445393, 011-2396520,
தொலைநகல்: 011-2445393
மின்னஞ்சல்:Senaservice@sltnet.lk

2-308

**ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ - மட்டக்களப்பு கிளையின் பகிரங்க ஏல விற்பனை**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ்*

**ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் வாஸ்ஹரன் டிரேடர்ஸ் இன் பங்காளிகளான ஆறுமுகம் தாங்ராஸ் மற்றும் தங்கராஸ் புஷ்பலதா ஆகியோர் கடப்பாடுடையவர்களாக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட கீழ்விபரிக்கப்படும் ஆதனங்கள் அமைந்துள்ள அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.**

***1 ஆம் விற்பனை***

*2020.03.11 ஆந் திகதி பி.ப. 1.30 மணிக்கு*

**ஆதனத்தின் விபரம்.-**

*மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், அம்பகமுவ கோரளை பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் ஹற்றன் டிக்கோயா நகர சபை எல்லைக்குட்பட்ட இல. 319D ஹற்றன் தெற்கு கிராம அலுவலர் பிரிவில் ஹற்றனில் அமைந்துள்ள வரிப்பண இல. 19/079 புருட்ஹில் எனும் காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் L.U.D.Y. விஜேவர்தன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1987.01.14 ஆந் திகதிய 3240 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட லொட் 13 என அடையாளமிடப்பட்ட காணித்துண்டின் மீளளவை உரிமம் பெற்ற சுமங்கலை சுப்பரமணியம் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2752A ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட லொட் 1 என அடையாளமிடப்பட்ட காணித்துண்டும் அதனுள்ளடங்கும் கட்டிடங்களும் மற்றும் சகலதுமாகும். இது 9.75 பேர்ச் பரப்பளவானது.*

**ஆதனத்தை வந்தடைதல்.-** *ஹற்றன் நகர மத்தியிலிருந்து திம்புல்லை பாதையில் சுமார் 1.5 கிலோமீற்றர் தூரம் அவிஸ்ஸசாவலை - நுவரெலியா A7 பாதை வரை வந்து இடதுப்ககமாகவுள்ள புருட் ஹில் இற்கு பிரவேசிக்கும் பாதையில் சுமார் 200 மீற்றர் தூரம் சென்று இடது பக்கமாகத் திரும்பி ஆரியகம வீட்டுக் கட்டிடத்தொகுதி பாதைக்குள் பிரவேசித்து அப்பாதையில் சுமார் 200 மீற்றர் தூரம் சென்றால் இப்பாதையின் வலது பக்கத்தில் இவ்வாதனம் அமைந்துள்ளது.*

***2 ஆம் விற்பனை***

*2020.03.12 ஆந் திகதி பி.ப. 1.00 மணிக்கு*

**ஆதனத்தின் விபரம்.-**

*கிழக்கு மாகாணம், திருகோணமலை மாவட்டம், திருகோணமலை நகர சபை மற்றும் கடவத் பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் திருகோணமலை நகர சபை எல்லைக்குட்பட்ட பெருந்திரு வட்டார இல. 07 பிரதான வீதியில் அமைந்துள்ள வரிப்பண இல. 212 எனும் காணி உரிமம் பெற்ற நிலஅளவையாளர் R. பொன்னுசாமி என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1409 ஆம் இலக்க 2002.05.03 ஆந் திகதிய வரைபடத்தில் குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட லொட் 1 இன் மீளளவை உரிமம் பெற்ற நிலஅளவையாளர் K. ஆறுமுகம் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1799 A ஆம் இலக்க 2015.12.30 ஆந் திகதிய வரைபடத்தில் குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட லொட் A என அடையாளமிடப்பட்ட காணித்துண்டும் அதனுள்ளடங்கும் இருமாடி வியாபாரக் கட்டிடமும் சகல உரிமைகளும் ஆகும். இது 8.10பேர்ச் (0.02050 ஹெக்டேயார் ) பரப்பளவானது.*

*(இவ்வாதனம் திருகோணமலை பிரதான வீதியில் வரிப்பண இல. 212 என இனங்காணலாம்).*

***3 ஆம் விற்பனை***

*2020.03.12 ஆந் திகதி பி.ப. 1.30 மணிக்கு*

**ஆதனத்தின் விபரம்.-** *கிழக்கு மாகாணம், திருகோணமலை மாவட்டம், திருகோணமலை நகர சபை மற்றும் கடவத் பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் திருகோணமலை நகர சபை எல்லைக்குட்பட்ட வட்டார இல. 08, பஸார் 4 ஆம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள வரிப்பண இல.15 எனும் காணி உரிமம் பெற்ற நிலஅளவையாளர் R. பொன்னுசாமி என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1239A ஆம் இலக்க 2001.02.13ஆந் திகதிய வரைபடத்தில் குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட லொட் 1 இன் மீளளவை உரிமம் பெற்ற நிலஅளவையாளர் R. பொன்னுசாமி என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2012.02.20 ஆந் திகதிய 2225 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட லொட் A என அடையாளமிடப்பட்ட காணித்துண்டும் அதனுள்ளடங்கும் கட்டிடங்களும் மற்றும் சகலதுமாகும். இது 6 பேர்ச் பரப்பளவானது.*

(இவ்வாதனம் வரிப்பண இல.15, 4 ஆம் குறுக்குத் தெரு, திருகோணமலை என இனங்காணலாம்).

***தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.-*** *2019.08.02 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2019.08.19 ஆந் திகதிய "மவ்பிம", "டேலி மிரர் " மற்றும் "தினக்குரல் " ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.*

**கொடுப்பனவு முறை.-** விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க் காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப்பணமாக செலுத்துதல் வேண்டும்:-

(1) கொள்முதல் விலையில் 10% (நூற்றுக்கு பத்து) ;
(2) பிரதேச சபை வரி 1% (நூற்றுக்கு ஒன்று) ;
(3) ஏல விற்பனையாளர் கட்டணம் விற்பனை விலையில் 2 1/2 % (நூற்றுக்கு இரண்டரை);
(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;
(5) இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் ரூ. 1500;
(6) நொத்தாரிஸ் கட்டணமும் விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணமும் ரூ. 2000.

கொள்முதலில் மிகுதி 90% இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்படவிருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு.**- ''சிரேஷ்ட முகாமையாளர் (கடன் அறவிடுதல் பிரிவு), ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ, இல. 479, ரீ. பி. ஜாயா மாவத்தை, கொழும்பு 10'' தொலைபேசி இல. : 011-2661836, 011- 2661835.

ஐ. டபிள்யூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம்
பெற்ற ஏல விற்பனையாளர்,

இல. 369/1,
துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல பாதை, மாவில்மட, கண்டி
தொலைபேசி : 081-2310595/071-8446374/071-4962449

2- 282

---

## யூனியன் பாங்க் ஒப் கொழும்பு பீஎல்சீ

பகிரங்க ஏல விற்பனை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கமுடைய வங்கி களினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடப்படல் 4 ஆவது சிறப்பு சட்டப்படி ஏல விற்பனை*

**ஆதன இடாப்பு**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அளுத்குரு கோரளை, ராகமபத்து, ஜா-எல மாநகர சபை எல்லைக்குள், கம்பஹா பிரதேச செயாலாளர் பிரிவில், வெலிகம்பிட்டி கிராம அலுவலர் பிரிவில், வெலிகம்பிட்டியவில் அமைந்துள்ள கலஎலிய வீதி, வரிமதிப்பீட்டு இலக்கம் 105/3, இடப்பட்ட வெலிகுருந்துவத்த என்ற பெயருடைய காணிக்கு அதிகாரம் பெற்ற நிலஅளவையாளர் ஏ. ஏ.பி.ஜயநாத் பெரேரா அவர்களால் அளவையிடப்பட்டு, தயாரிக்கப்பட்ட இலக்கம் 3404 மற்றும் 2014.08.01 ஆந் திகதியிடப்பட்ட வரைபடத்தின் பிரகாரம் பகிர்ந்து ஒதுக்கப்பட்ட லொட் 48 இடப்பட்ட காணி( அதிகாரம் பெற்ற நிலஅளவையாளர் எம். டி. கே. வி. பெரேரா அவர்களால் அளவையிடப்பட்டு தயாரிக்கப்பட்ட இலக்கம் 2571 மற்றும் 1973, யூன் 12 ஆந் திகதியிடப்பட்ட வரைபடத்தில் வெலிகுருந்துவத்த என்ற பெயருடைய காணி லொட் 48 இடப்பட்ட நிலப்பிரதேசம் மீளவும் அளவையிட்டு பகிர்ந்த)
இக்காணியின் விஸ்தீரணம்
(0ஏ.0றூ.23.75பே.)
விசாலமுள்ள காணித்துண்டு .

இது கம்பஹா காணிப் பதிவு அலுவலகத்தில் J 187/126 இடப்பட்ட இருமடிப்புத் தாளில் பதிவு செய்யப்பட்டுள்ளதோடு தற்போது கம்பஹா காணிப் பதிவலுவலகத்தில் து 187/135 இடப்பட்ட இருமடிப்புத் தாளிற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. மேலும் லொட் 4C ( கம்சபா வீதி) மற்றும் மாட்டு வண்டி வீதி( 8 அடி அகலம்) ஊடாக பயணிக்கும் பாதையின் உரித்தோடு.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் ஜா-எல, கலஎலிய, ஸ்ரீ ஜய மாவத்தை, என்ற முகவரியில் மற்றும் ஜா-எல , கலஎலிய வீதி, பெரேரா மாவத்தை, என்ற முகவரியில் வசிக்கும் சாமின் ரொபட் இயன் போவி ( தேசிய அடையாள அட்டை இல. 781591017V) இங்கு இதன் பின்னர் ஏதாவதொரு இடத்திற்கு "பிணையாளி" யாக அடையாளப்படுத்தப்பட்ட என்பவரினால் கடன் வசிதியைப் பெற்றுக் கொண்டுள்ளதாலும், சொல்லப்பட்ட பிணையாளியினால் இங்கு ஆதன இடாப்பில் விபரமாக குறிக்கப்பட்டுள்ள காணி சம்பந்தமாக பகிரங்க நொத்தாரிசு எஸ். பி. ஏ. என். சில்வா அவர்களால் உறுதிப்படுத்தப்பட்ட இலக்கம் 03 மற்றும் 2018.04.17 ஆந் திகதி ஆரம்ப ஈட்டு முறியை எழுதி கையொப்பமிட்டு சொல்லப்பட்ட கடன் வசதிக்காக நிறுவனப் பதிவு இலக்கம் PB 626 PQ இடப்பட்ட யூனியன் பாங்க் ஒப் கொழும்பு பீஎல்சீ (இங்கு இதன் பின்னர் ஏதாவதொரு இடத்தில் "யூனியன் பாங்க்" என அறியப்பட்ட) க்கு அறவிடப்பட வேண்டிய பணம் மற்றும் அதன் மீதுள்ள வட்டி மீளளிப்புச் செய்வதற்காக பிணையாக இங்கு மேலே குறிக்கப்பட்ட ஆதன இடாப்பில் விபரமாக குறிக்கப்பட்டுள்ள அசையாத சொத்து ஈடு வைக்கப்பட்டு பிணையாக வைக்கப்பட்டுள்ளதாலும், யூனியன் பாங்க் ஒப் கொழும்பு பீஎல்சீயினால் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம்,

2020 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 03 ஆந் திகதி பி.ப. 1.30 மணிக்கு மேற் சொல்லப்பட்ட காணிகளை என்னால் அதே இடத்தில் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.

**காணிக்கு செல்லும் விதம்.**- கொழும்பு- நீர்கொழும்பு வீதியில் பயணிக்கும் பொழுது காணப்படும் 13 ஆவது கிலோமீற்றர் தூணைத் தாண்டி 50 மீற்றர் முன்னால் செல்லும் பொழுது ஜா-எல, கபுவத்த சந்தி காணப்படுகின்றது. அங்கிருந்து இடப்பக்கமாகத் திரும்பி கல- எலிய வீதியில் 400 மீற்றர் பயணித்து "Y " சந்தி வரை வந்து அங்கிருந்து இடதுபக்கமாகத் திரும்பி கல- எலிய வீதியில் 600 மீற்றர் பயணித்து இடதுபக்கமாகத் திரும்பி கொங்கிறீட் போடப்பட்டுள்ள ஸ்ரீ ஜய மாவத்தை, எதுலுவத்த, ஸ்ரீ ஜயமாவத்தையில் 100 மீற்றர் பயணிக்கும் பொழுது இந்தக் காணி வீதியின் இடப்பக்கத்தில் பாதையின் அருகே அமைந்துள்ளது.

**கொடுப்பனவு செய்யும் முறை.**- ஏல முடிவில் உத்தேசக் கொள்வனவாளர் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏல- தாரருக்கு செலுத்த வேண்டும்:-

(1) கொள்வனவு விலையின் பத்து (10%) சதவீதம் ;
(2) மிகுதி 90% ஏலத்திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் யூனியன் பாங்க் பீஎல்சீ பிரதான அலுவலகத்தில் வைப்புச் செய்யப்படல் வேண்டும்;
(3) ஏலதாரரின் தரகும் பணம் இரண்டரை சதவீதம் (2.5%);
(4) உள்ளூராட்சி மன்ற வரி ஒரு (1%) சதவீதம் ;
(5) ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு செலவுகள் 100% ;
(6) இலிகிதர் கட்டணம் 1,500 ரூபா ;

(7) நொத்தாரிசுக் கட்டணம் 3,500 ரூபா .

**ஏனைய விபரங்களுக்கு**.-"சட்டப்பிரிவுத் திணைக்களம், யூனியன் பாங்க் ஒப் கொழும்பு பீஎல்சீ, இல. 64, காலி வீதி, கொழும்பு -03". தொலைபேசி இல.: 0112374100.

எல் .பீ. சேனாநாயக்க,
உத்தரவுபெற்ற ஏல விற்பனையாளர்கள்,
மதிப்பீட்டாளர்கள் மற்றும் கொழும்பு
வர்த்தக உயர் நீதிமன்றம், மேல் மாகாணம்
கொழும்பு மாவட்ட நீதிமன்றம்
அரச மற்றும் வர்த்தக வங்கி
ஆகியவற்றுக்கான நீதிமன்ற
ஆணையாளர்.

இல.200, 2 ஆவது மாடி,
புதுக்கடை வீதி, கொழும்பு 12,
தொலைபேசி /தொலைநகல் இல. 077-3242954, 011-2445393.

2- 307

---

## பொலிஸ் மோப்ப நாய்கள் ஏல விற்பனை

பொலிஸ் திணைக்களத்திற்கு சொந்தமான கீழ்க் காணப்படும் மோப்ப நாய்கள் 2020.02.21 ஆந் திகதியன்று காலை 9.00 மணிக்கு கண்டி, அஸ்கிரிய, பொலிஸ் மோப்ப நாய்கள் தலைமையகத்தில் ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன. இம் மோப்ப நாய்களை அன்றைய தினம் காலை 8.00 மணிக்கு பார்வையிடலாம்.

| இலக்கம் | இனம் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 01. | பெல்ஜியம் மெலனொயிஸ் | 01 | 03 | 04 |
| 02. | இங்லிஷ் ஸ்பெனியல் | 01 | 01 | 02 |
| 03. | ரொட்வயலர் | 01 | - | 01 |
| 04. | லெப்ரடோர் ரிட்ரிவர் | 01 | 02 | 03 |
| | **மொத்தம்** | **04** | **06** | **10** |

ஹ

எல் ஏ.செனவிரத்ன,
சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்.

பொலிஸ் மோப்ப நாய்கள் பிரிவு,
அஸ்கிரிய - கண்டி,
2020, சனவரி 31.

2- 343